


# எமது தேசத்திற்கும் அதனது மக்களுக்கும் செழுமையைப் பெற்றுத்தர நாம் ஒரு பயணத்தில் இருக்கின்றோம். நீங்கள் அதனொரு பங்காளராக இருக்க விரும்புகிறீர்களா???

**நாடு முழுவதிலும் 272 கிளை வலையமைப்புகளையும் கொண்ட இலங்கையின் முன்னணி அரசுரிமை அபிவிருத்தி வங்கியான பிராந்திய அபிவிருத்தி வங்கியில் நிலவும் பின்வரும் பதவிக்கு தேவையான தகைமைகள் சகிதம் பெறுபேறுகள் சார்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

## உதவி முகாமையாளர் - சபைச் செயலாளர்

**பணியிடம் - சபைச் செயலாளர் பிரிவு - தலைமை அலுவலகம்**

**முக்கிய தேவைப்பாடுகள்**

- உயர் நீதிமன்ற சட்டத்தரணியொருவராக இருக்க வேண்டும். சட்டப் பட்டத்தைப் (LLB) பெற்றிருத்தல் விசேட தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.
- சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் நொத்தாரிசு உரிமத்தைக் கொண்டிருக்க வேண்டும்.
- நிறுவனச் செயலாளர் உரிமத்தைக் கொண்டிருக்க வேண்டும்.
- அரச / தனியார் வங்கி அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனமொன்றில் சட்டம் மற்றும் பணிப்பாளர் சபை செயலாளராக குறைந்தபட்சம் 02 வருட கால அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும்.
- கூட்டுவர்த்தக நிர்வாகம், சட்ட ஆவணப்படுத்தல் மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பு என்பவற்றில் திடமான அறிவைக் கொண்டிருக்க வேண்டும்.
- கணனி ஆற்றல் இருக்க வேண்டும்.
- ஆங்கிலத்தில் புலமை அவசியமாகும்.
- 35 வயதிற்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

## உதவி முகாமையாளர் - சட்டம்

**பணியிடம் - சட்டப் பிரிவு - தலைமை அலுவலகம்**

**பிரதான பொறுப்புகள்**

- அடகுக் கடன் உறுதிகளை எழுதி உறுதிப்படுத்துதல் மற்றும் வங்கியின் சார்பாக ஏனைய சட்டபூர்வமான ஆவணங்களை தயாரித்தல் மற்றும் சான்றுபடுத்துதல்
- சட்டபூர்வமான விடயங்கள் மற்றும் நீதிமன்ற வழக்குகள் தொடர்பில் வங்கியின் அதிகாரிகளுடன் இணைந்து செயலாற்றுதல்
- முகாமைத்துவத்தினால் அனுப்பப்படும் விடயங்களுக்கு இயைபாக சிரேஷ்ட சட்டத்தரணி அல்லது சபைச் சட்டத்தரணிகளுடன் (Panel Lawyers) ஆலோசனை கலந்துரையாடல்களை நடாத்துதல்
- முறைப்பாடுகள், சத்தியப் பிரகடனம் மற்றும் பெட்டிசன்களை நகர வரைவு செய்தல், தொடர்புடைய நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்தல் மற்றும் வழக்கின் பொருட்டு நீதிமன்றத்தில் முன்னிலையாதல்.
- ஏனைய சகல சட்டபூர்வமான நடவடிக்கைகள்.

**அடிப்படைத் தகைமைகள்:**

- உயர் நீதிமன்ற சட்டத்தரணியாகவிருத்தல் மற்றும் பிரசித்த நொத்தாரிசாக இருத்தல், சட்டப் பட்டத்தைப் பெற்றிருத்தல் விசேட தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.
  (துறையுடன் தொடர்புடைய பட்டப் பின்படிப்புத் தகைமை அல்லது வங்கி / நிதிப் பிரிவில் தொழில்சார்ந்த பரீட்சைகளில் சித்தியடைந்திருத்தல் மேலதிக தகைமையாகும்.

  **மற்றும்**

  சட்டத்தரணி மற்றும் நொத்தாரிசு நடவடிக்கைகளில் குறைந்தபட்சம் 02 வருடகால அனுபவம் அல்லது அரசாங்கம் அல்லது தனியார் நிறுவனம் / சட்ட நிறுவனமொன்றில் சட்ட நடவடிக்கைகளில் 2 வருடகால அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும். வங்கியொன்றில் அல்லது அங்கீகாரம் பெற்ற நிதி நிறுவனமொன்றில் உள்ள அனுபவம் விசேட தகைமையாகும்.
- தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் வசம் குறித்த நீதிமன்ற வலயத்தினுள் இரண்டு மொழிகளிலும் (சிங்களம் மற்றும் ஆங்கிலம்) நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஆற்றல் சகிதம் நொத்தாரிசு உரிமத்தைப் பெற்றிருக்க வேண்டும்.
- கணனி ஆற்றல் இருக்க வேண்டும்.
- 40 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

**சம்பளம்**

தெரிவு செய்யப்படும் அபேட்சகருக்கு ஒரு கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**விண்ணப்பிக்க வேண்டிய முறை:**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை உறவினரல்லாத இரண்டு பரிந்துரையாளர்களின் தகவல்கள் சகிதம் விடய (Subject) நிரலில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு 2026 பெப்ரவரி 10ஆம் திகதி அல்லது அதற்கு முன் careers@rdb.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

மேற்கூறிய தேவையான தகுதிகளைக் கொண்டிராத அல்லது தவறான தகவல்களைச் சமர்ப்பித்துள்ள எந்தவொரு விண்ணப்பமும் ஆட்சேர்ப்பின் எந்தவொரு கட்டத்திலும் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். குறும் பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரிகளை மட்டும் நேர்காணலுக்கு அழைப்பதற்கும் மற்றும் ஆட்சேர்ப்பை ஒத்திவைப்பதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank

பிரதான மனிதவள அதிகாரி
பிரதேச அபிவிருத்தி வங்கி.
இல.933, கண்டி வீதி, வெதமுல்ல, களனி.
0112 03 54 54 | www.rdb.lk